ஆரம்பிப்பதை விட. நமது அரசு தலைநகரத்தைக் கூட தமிழகத்தின் மத்திய பகுதியான திருச்சியிலே வைக்க வேண்டுமென்று கருத்து சொல்லிக் கொண்டிருக்கும்போது, இந்தப் பல்கலைக் கழகத்தைக் கூட, மத்திய பகுதியான மதுரையில் வைத்தால், நிலத்திற்கு நாம் ஏற்பாடு செய்து கொடுக்க முடியும் என்பதை அமைச்சருக்குச் சொல்லிவிட்டு, கன்னியாகுமரி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கான்வாசிங் நேரம் அல்ல, கேள்வி நேரம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: புதிய பல்கலைக் கழகம் மதுரையில் வைக்கப்படுமா? அரசினுடைய கொள்கையே, மத்திய பகுதிக்குத் தலைநகரம் மாற்றப்பட வேண்டுமென்று இருக்கும் போது, இதையும் மத்திய பகுதியான மதுரையில் வைக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இப்பொழுது இடத்தைப் பொறுத்தவரை, உறுதியாக எந்தப் பகுதியும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. அப்படி ஒரு கருத்து இருக்கிறது என்றுதான் சொன்னேன். எந்த இடத்திலே வைக்கலாம் என்பது கூட டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்சிலே வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்தைக்கூட, அந்தக் குழு கவனிக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 185, திரு. டி. இராசரத்தினம், மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள்.....

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கொடுத்தவர் எனக்கு இரண்டு கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும். அதைத் தாங்கள் மறுக்கக் கூடாது. அது எங்கள் உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உரிமையை மறுக்க வில்லை. நீங்கள்தான் * என்று சொன்ன முதல் ஆள். ஆகவே, நீங்கள் வேறு கேள்வி கேட்க என்ன இருக்கிறது? * என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என உத்தரவிடுகிறேன்.

ஆவடியில் அரசு மருத்துவமனை ஆரம்பிக்கும் திட்டம்.

* வினா எண் 185—திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1983 பிப்ரவரி 8]

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஆவடி நகரியத்தில் ஐம்பது படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ஆவடியில் புதிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை கட்டுவதற்காக 18 ஏக்கர் காலி நிலம் ஒன்றை ஆர்ஜிதம் செய்ய, செங்கை மாவட்ட மருத்துவ அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மேற்படி இடம் கட்டிடம் கட்ட ஏதுவானதா என்பது பற்றி மண் பரிசோதனை செய்யப் பட்டு வருகிறது.

(இ) மேற்கண்ட நிலத்தின் மண் பரிசோதனை முடிவு இன்னும் தெரியவில்லை. இவ்விவரம் கிடைக்கப்பெற்றதும் மருத்துவமனை கட்டுவதற்கான திட்டமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு அரசு பரிசீலனை செய்யும்.

இலவச மருத்துவ வசதி பெறுவதற்கான வருமான வரம்பை உயர்த்தும் திட்டம்.

* வினா எண் 186—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெறு வதற்கான வருமான வரம்பை உயர்த்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்,

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் சாதாரண வருவாய் உள்ள ஏழைகள் அனுமதிக்கப்படும் நேரத்தில் ஒருவருக்கும் மருந்து முறையாகக் கிடைப்பதில்லை என்ற பெரிய புகார் இருக்கிறது. உதாரண மாக, ஜெனரல் ஹாஸ்பிடலில் எந்தவிதமான மருந்துகளும்....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மானியக் கோரிக்கையில் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லலாம், அதற்குப் பதில் சொல்வது சரியாக இருக்கும். குறிப்பிட்ட இந்த மூலக் கேள்விக்குத் தொடர்புடைய குறைபாடு களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பார்களே யானால் அதற்குப் பதில் சொல்லலாம். ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டைச் சுமத்தினால் அது பெரிய விவாதம் ஆகிவிடும்.